14965/2024 SCANED

TP/195180620/2024



தமிழ்நாடு தமிலநாடு TAMILNADU

19 SEP 2024

EE 782063

DILIPKUMAR.D
CHENNAI

V. MANOHARI (S.V.)
W.TAMBARAM, CHENNAI - 45
No. 16558 / C / 89 DT. 4.12.89
Cell: 90945 80808

பொது அதிகார ஆவணம்

2024-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 19-ஆம் தேதி, சென்னை-600 035, நந்தனம், கிழக்கு சி.ஐ.டி நகர், 3-வது குறுக்கு தெரு, கதவு எண்.23/40 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.தட்சிணாமூர்த்தி அவர்களின் குமாரர் சுமார் 44 வயதுள்ள திரு.D.திலீப் குமார் (AADHAAR No.805275725791 and PAN-AVIPK6019L) ஆகிய உங்களுக்கு,

For TAASA
Proprietor

அதிகாரம் பெறுபவர்

அதிகாரம் அளிப்பவர்

Document No. 14965 of 2024 of book 1
contains 14 Sheets 1 Sheet

Registering Officer

சென்னை 600 048, மண்ணிவாக்கம், தங்கவேல் நகர், இரண்டாம் தளம், நெம்பர்.44-ல் இயங்கி வரும் **M/s. TAASA** என்ற நிறுவனத்தின் சார்பாக அதன் உரிமையாளர் **திரு.V.தியாகு (PAN-BTZPT2073B and AADHAAR No.816682283852)** த/பெ. திரு.E.வேணுகோபால், வயது **26,** முகவரி எண். பிளாட் நெம்பர்.16, முதல் மெயின் ரோடு, எபினேசர் காட்டேஜ், டான்சி நகர், ஆதனூர் ரோடு, வரதராஜபுரம், மண்ணிவாக்கம், சென்னை 600 048, ஆகிய நான் கீழ்க்கண்ட சாட்சிகளின் முன்னிலையில் மனப்பூர்வமாய் சம்மதித்து எழுதி கொடுக்கும் பொது அதிகார பத்திரம் என்னவென்றால்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், தென்சென்னை பதிவு மாவட்டம் தற்போது தாம்பரம் பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி துணைப்பதிவு மாவட்டம், குன்றத்தூர் பஞ்சாயத்து யூனியனை சார்ந்த ஆதனூர் முதல் நிலை ஊராட்சி எல்லைக்குட்ப்பட்ட, பழைய நெம்பர்.**193** புதிய நெம்பர்.**84, ஆதனூர் கிராமம்,** பழைய பட்டா எண்.**4114,** புதிய பட்டா எண்.**11608-ல்** தாக்கலாகி வரும் **சர்வே எண்.27/1B-ல்** அடங்கிய பூரா விஸ்தீரணம் **31 செண்ட் (முப்பத்தோறு செண்ட்)** கொண்ட நிலமானது கூடுவாஞ்சேரி சார்பதிவகத்தில் 19.09.2024-ம் தேதியில் பதியப்பட்ட **1** புத்தகம், **2024-ஆம் ஆண்டின் 14950-ஆம்** நெம்பர் கிரைய ஆவணத்தின் விவரப்படிக்கு **திரு.D.மதன்லால்** (D.MADHANLAL) மற்றும் **திரு.R.அசோக் ராம்லால்** (R.ASHOK RAMLAL) ஆகிய இவர்களிடமிருந்து மேற்படி நிறுவனத்தின் பெயரில் கிரையம் பெறப்பட்டதாகும்.

மேற்படி கிரைய ஆவணத்தின் விவரப்படிக்கு மேற்படி நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட கீழே சொத்து விவரத்தில் விவரமாக விவரித்தப்படி உள்ள நிலத்தினை தற்போது விற்க முடிவு செய்து மேற்படி நிறுவனம் சார்பாக என்னால் கிரையம் பெறும் நபரை சந்தித்து விலை பேச முடியாத காரணத்தினாலும் மேற்படி சொத்தை பராமரிக்க முடியாத நிலையிலும் **திரு.D.திலீப் குமார்** ஆகிய தங்களை என்னுடைய பொது அதிகார முகவராக நியமித்து கீழ்க்கண்ட அதிகாரங்களை தங்களுக்கு வழங்குகின்றேன்.

For TAASA

Proprietor

Document No.14965 of 2024 of book 1
contains 14 Sheets 2 Sheet
Registering Officer

சொத்து விவரத்தில் விவரித்தப்படி உள்ள நிலத்தினை மேற்படி நிறுவனத்தின் சார்பாக தாங்களே மொத்தமாகவோ, பிரித்தோ விற்பனை செய்யவும், கிரையம் பெறும் பார்ட்டிக்கு கிரயத்தொகையை மேற்படி நிறுவனத்தின் சார்பாக தாங்களே நிச்சயிக்கவும், அக்கிரிமெண்டு சாசனம் தயார் செய்து அதில் மேற்படி நிறுவனத்தின் சார்பாக தாங்களே கையொப்பம் செய்து, அட்வான்ஸ் தொகையை மேற்படி நிறுவனத்தின் சார்பாக பெற்றுக் கொள்ளவும்.

கிரய காலத்தில் கிரய சாசனங்களை மேற்படி நிறுவனத்தின் சார்பாக தாங்களே தயார் செய்து அதில் தாங்களே கையொப்பம் செய்து, கிரயத் தொகை முழுவதும் தாங்களே பெற்றுக் கொள்ளவும் அல்லது சார்பதிவாளர் அவர்கள் முன்னிலையில் செலுத்தும் கிரயத் தொகையை மேற்படி நிறுவனத்தின் சார்பாக தாங்களே பெற்றுக்கொள்ளவும்,

அவ்வாறு கையொப்பம் செய்யப்பட்ட கிரய சாசனங்களை மேற்படி நிறுவனத்தின் சார்பாக தாங்களே சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்து, பத்திர பதிவு சம்மந்தப்பட்ட எண்டார்ஸ்மெண்டகளிலும் மற்றும் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கான இதர நமூனாக்களிலும் தாங்களே கையொப்பம் செய்து, பத்திர பதிவு பூர்த்தி செய்து தரவும்,

பதிவு செய்யப்படும் கிரய சாசனங்களில் ஏதேனும் பிழைகள் நேரிட்டால் அதற்காக வேண்டி தாங்களே முன்னின்று பிழை திருத்தல் பத்திரம் தயார் செய்து, அதில் மேற்படி நிறுவனத்தின் சார்பாக தாங்களே கையொப்பம் செய்து, பத்திரம் பதிவு செய்து தரவும்,

For TAASA

Proprietor

Document No.1495 of 2024 of book 1
contains 14 Sheets 3 Sheets
Registering Officer

சொத்து விவரத்தில் கண்டுள்ள நிலத்தினை வீட்டு மனைகளாக பிரித்து மனை உட்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் பெறவும், மனையில் தனி வீடு மற்றும் அடுக்குமாடி வீடு கட்டி விற்பனை செய்யவும், அரசு அங்கீகாரம் பெற தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் இது சம்மந்தமான C.M.D.A,/D.T.C.P, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், பஞ்சாயத்து யூனியன் அலுவலகம், சீலிங் அலுவலகம், மின்சாரவாரிய அலுவலகம் மற்றும் இதர அலுவலகங்களில் எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளை எடுக்கவும், எழுத்து மூலமாக வாக்கு மூலங்கள் தரவும், நேரடி விசாரணைக்கு ஆஜராகவும்.

சொத்து விவரத்தில் கண்டுள்ள நிலத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு வங்கிகளிலோ, வங்கிச்சார நிறுவனத்திலோ அல்லது தனி நபர்களிடமோ கடன் பெறவும், அதற்காக வேண்டி அடமானக்கடன் பத்திரம் அல்லது ஆவண ஒப்படைப்பு பத்திரம் எழுதி தகுந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுக்கவும், பைசல் செய்து தரவும் இதன் மூலம் நான் தங்களுக்கு அதிகாரம் அளிக்கிறேன்.

மேலும் சொத்து விபரத்தில் விவரித்தப்படி உள்ள நிலத்தினை தாங்கள் விற்பனை செய்யும் வரை மேற்படி நிறுவனத்தின் சார்பாக தாங்களே பாதுகாத்து வந்து, கிரயம் பெறும் பார்ட்டிக்கு நல்ல நிலையில் ஒப்படைக்கவும், அபிவிருத்தி செய்யவும், இந்த சொத்து சம்மந்தமாக ஏதேனும் வழக்குகள் ஏற்பட்டால், அதற்காக வேண்டி தாங்களே மேற்படி நிறுவனத்தின் சார்பாக முன்னின்று ஆஜராகவும், வழக்குகள் தொடரவும் வக்கீல் வைத்து வாதாடவும், சொத்துரிமை பெறவும் இதன் மூலம் மேற்படி நிறுவனத்தின் சார்பாக நான் தங்களுக்கு அதிகாரம் அளிக்கிறேன்.

For TAASA

Proprietor

Document No. 14965 of 2024 book: 2 contains 14 Sheets 4 Sheet

Registering Officer